**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை: திருமதி.R.D.குருலட்சுமி M.A.,M.L., PGDI & CL.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு, 2053, ஸ்ரீ சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 15-ம் நாள்**
**இ.ம.எண்.3/2022 இன் மு.வ.எண். 14/2019**

1. ரமீலா
2. D.G.கண்ணன்
3. குணவதி
4. மேனகா
5. மஞ்சுளா
6. கணேசன்
7. வன்னியப்பன் ....மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

-எதிர்-

1. புஷ்பவள்ளி
2. பொட்டிமுத்து
3. நாராயணமூர்த்தி
4. மூலப்பொருள் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என்முன்பு 17.10.2022 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.செல்லச்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.நாகேந்திரன், திரு.கே.திரவியம் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள Ex B1 ஆவணத்தில் உள்ள முதல்வரான ஆதிமூலம் என்பவரது கையெழுத்தையும், சாட்சிகளான ராசு மற்றும் மணி ஆகியோர்களின் கையெழுத்துக்களையும், Ex B2 ஆவணத்தில் உள்ள முதல்வர்களாகிய ஆதிமூலம், ராசு மற்றும் மணி ஆகியோர்களின் கையெழுத்துக்களையும், தடயவியல் துறையின் மூலமாக ஆய்வுக்கு உட்படுத்தி, மேற்படியாளர்களின் கைரேகைகளை ஒப்பீடு செய்து கையெழுத்து நிபுணர் மூலம் அறிக்கை பெற ஏதுவாய் நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்து உத்திரவிட வேண்டி மனு தாக்கல்.

**1) மனு அபிடவிட் சுருக்கம்:**

a) தாவாவழக்கானது வாதிகளால் விளம்புகை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், ஆவண எண். 172/99, ஆவண எண். 285/99, ஆவண எண்.2308/99 ஆகிய கிரைய ஆவணங்களை செல்லாது என விளம்புகை செய்யவும், தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல்வழக்கானது வாதிதரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 மற்றும் பி.சா.2 விசாரணை செய்யப்பட்டு, சாட்சி விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. தாவாசொத்தானது ஆதியில் கனகராஜ் என்பவரால் பவர்ஏஜெண்ட் ஸ்தானத்தில் இருந்து, ஆதி மூலம் என்பவருக்கு 15.10.1984 ம் தேதியில் ஆவண எண்.1488/1984 என்ற ஆவணத்தின் படி

கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆதிமூலம், 04.07.1997ம் தேதியிட்ட ஆவண எண்.51/1997 ன் படி மனுதாரருக்கு ஜெனரல் பவர் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். அதில் சாட்சிகளாக 1ம் வாதியின் கணவரும், 2 முதல் 4 வரை உள்ள பிரதிவாதிகளின் தந்தையுமான ஆதிமூலத்தின் சகோதரர்களான ராசுத்தேவர், மணித்தேவர் ஆகியோரும் கையொப்பம் செய்துள்ளனர். அது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

b) பின்னர் ஆதிமூலம் மற்றும் அவரது சகோதரர்களான ராசுத்தேவர், மணித்தேவர், பாலுச்சாமி ஆகியோர்கள் இணைந்து கடந்த 16.02.1998 ம் தேதியன்று தாவாசொத்தையும், 04.07.1997 ல் எழுதிக் கொடுத்துள்ள பவர் ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் குறித்தும், மனுதாரர் பெயருக்கு ஜெனரல் பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளனர். அது பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1 ஆவணத்தைப் பொறுத்து, எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் ஒப்புக்கொண்டும், பி.சா.ஆ.2 ஆவணத்தைப் பொறுத்து ஆட்சேபனை செய்து அதிலுள்ள ஆதிமூலம் கையெழுத்து உண்மையல்ல என்று மறுத்து வருவதாலும், மேற்படி பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணங்களின் உண்மைத்தன்மையை நிரூபணம் செய்ய வேண்டி மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

மனுவில் கூறியுள்ள விசயங்கள் ஆட்சேபிக்கப்படுகிறது. அசல்வழக்கானது கடந்த 2013ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் எழுத்து மூல எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எழுத்து மூல எதிர்வழக்குரையில், பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணங்கள் முறைப்படி பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள நிலையில் சுமார் 9 ஆண்டுகள் கழித்து, கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்ப மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அசல்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியங்கள் முடிவுற்ற நிலையில், வழக்கை தாமதப்படுத்தும் நோக்கத்தோடு இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கையெழுத்து நிபுணர் அறிக்கைக்கு சமகாலத்தைச் சேர்ந்த சுமார் 5 கையொப்பங்கள் உள்ள இரண்டிற்கும் மேற்பட்ட ஆவணங்கள் தேவைப்படும் நிலையில், பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆகிய இரண்டு ஆவணங்களை மட்டும் ஒப்பிட்டு பார்க்க மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள கையொப்பங்களை ஒப்பிட்டு பார்க்க வேண்டும்என்று கூறிவிட்டு அதற்கான எந்த மனுவும் தாக்கல் செய்யாமல் இம்மனு தாக்கல் செய்திருப்பதிலிருந்தே மனுதாரர்கள் அசல்வழக்கின் விசாரணையை காலதாமதப்படுத்தும் நோக்கில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தெரிய வரும். எனவே மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

**3)** இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா? இல்லையா? என்பதே ஆகும்.

**4)** அசல்வழக்கில் வாதிகளால் பி.சா.ஆ,.1 ஒப்புக்கொள்ளப்பட்டு, பி.சா.ஆ.2 மறுக்கப்படுவதால், மேற்படி இரண்டு ஆவணங்களையும் கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி மேற்படி ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்களை ஒப்பீடு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் எனவே மனுவை அனுமதிக்கக் கோரி வாதிடப்பட்டது. சார்பதிவக

அலுவலகத்தில் உள்ள ஆதிமூலம், ராசு, மணி ஆகியோரது கையொப்பங்கள், கைரேகைகளை வரவழைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதிலிருந்தே அசல்வழக்கை காலம் தாழ்த்த இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், எனவே மனுவை தள்ளுபடி செய்யக் கோரி வாதிடப்பட்டது.

**5)** அசல்வழக்கில் வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதில் பி.சா.ஆ.1 ஆவணம் ஒப்புக்கொள்ளப்பட்டு, பி.சா.ஆ.2 ஆவணம் மறுக்கப்பட்டுள்ளது. மனுவில் பி.சா.ஆ.1 ல் உள்ள ஆதிமூலம், ராசு, மணி ஆகியோர்களின் கையெழுத்துக்கள் மற்றும் கைரேகையும், பி.சா.ஆ.2ல் உள்ள ஆதிமூலம், ராசு, மணி ஆகியோர்களின் கையெழுத்துக்கள் மற்றும் கைரேகையையும், மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை தடயவியல் துணை இயக்குநருக்கு அனுப்ப கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.2 ல் ஆதி மூலம், ராசு, மணி ஆகியோர்களின் கையெழுத்துக்கள் மற்றும் கைரேகைகள் உள்ளது.

**6)** பி.சா.ஆ.1ல் ஆதிமூலத்தின் கையெழுத்து மற்றும் கைரேகை உள்ளது. ஆனால் பி.சா.ஆ.2 ல், ராசு, மணி ஆகியோர்களின் கைரேகைகள் இல்லாத நிலையில், கைரேகைகளை ஒப்புநோக்க கோரி மனுதாக்கல் செய்துள்ள மனுதாரர், மேற்படி ஆவணத்தின் அசல் கைரேகைப் பதிவேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து வரவழைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, இம்மனுவினை பார்வையிடும் போது, அசல்வழக்கை காலம் கடத்தவேண்டியே இந்த மனுவை தாக்கல் செய்துவிட்டு, கைரேகை பதிவேட்டை வரவழைக்க எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அசல்வழக்கின் விசாரணையை காலம் தாமதம் செய்து வருகிறார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, மனுதாரரின் மனுவானது எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தர்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2022-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 01-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

/ஒம்/ திருமதி.R.D.குருலட்சுமி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை-

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை

/ஒம்/ திருமதி.R.D.குருலட்சுமி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

/உண்மைநகல்/

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
திருப்புவனம்.

இ.ம.எண். 3/2022 இன்
மு.வ.எண். 14/2019
01.11.2022

வரைவு/ சீரான உத்தரவு